பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

**04 07 2026** **SATURDAY** **7.15 AM**

ஆகாஷ்வாணி

<u>தலைப்புச் செய்திகள்</u>

**1.** பிரதமர் திரு. நரேந்திர மோடி குஜராத் மாநிலம் சனந்த் பகுதியில் அமைக்கப்பட்டுள்ள செமிகண்டக்டர் உற்பத்தி மற்றும் பரிசோதனை கூடத்தை இன்று திறந்து வைக்கிறார்.

**2.** எல்நினோ பாதிப்பால் மழைப்பொழிவு குறைந்துள்ள பகுதிகளில் மாற்று ஏற்பாடுகளை செய்ய வேண்டும் என்று அதிகாரிகளுக்கு உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா அறிவுறுத்தியுள்ளார்.

**3.** ஒரு டிரில்லியன் அமெரிக்க டாலர் ஏற்றுமதி இலக்கை அடைவதற்கான பாதையில் இந்தியா உறுதியாக முன்னேறி வருவதாக மத்திய அமைச்சர் திரு. பியூஷ் கோயல் தெரிவித்துள்ளார்.

**4.** தில்லி முழுவதும் இதுவரை, சுமார் ஒரு லட்சத்து இரண்டாயிரம் வாக்காளர் படிவங்கள் டிஜிட்டல் மயமாக்கப்பட்டுள்ளதாக தில்லி தலைமைத் தேர்தல் அதிகாரி அலுவலகம் கூறியுள்ளது.

**5.** உலகக் கோப்பை கால்பந்து போட்டியில் காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு அர்ஜென்டினா, சுவிட்சர்லாந்து, எகிப்து நாடுகள் முன்னேறியுள்ளன.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<<>>>>>

பிரதமர் திரு. நரேந்திர மோடி குஜராத் மாநிலம் சனந்த் பகுதியில் அமைக்கப்பட்டுள்ள செமிகண்டக்டர் உற்பத்தி மற்றும் பரிசோதனை கூடத்தை இன்று திறந்து வைக்கிறார்.

இந்திய செமிகண்டக்டர் தொலைநோக்கு திட்டத்தின்கீழ் அங்கீகரிக்கப்பட்ட முதல் நான்கு திட்டங்களில் இதுவும் ஒன்றாகும்.

சுமார் 7 ஆயிரத்து 500 கோடி ரூபாய் முதலீட்டில் உருவாக்கப்பட்டுள்ள இந்த ஆலையில், வர்த்தக ரீதியான உற்பத்தி இன்று தொடங்குகிறது.

இந்த ஆலை முழு திறனுடன் செயல்படும்போது, ஆண்டுக்கு 500 கோடி செமிகண்டக்டர் சிப்புகளை உற்பத்தி செய்யும் திறன் கொண்டதாக இருக்கும்.

இது செயற்கை நுண்ணறிவு மற்றும் உயர் செயல்திறன் கொண்ட கணினித் தேவைகளுக்கான சில்லுகளின் உலகளாவிய தேவையைக் பூர்த்தி செய்ய பெரிதும் உதவும் என்று மத்திய அரசு தெரிவித்துள்ளது.

<<<<<>>>>>

எல்நினோ பாதிப்பால் மழைப்பொழிவு குறைந்துள்ள பகுதிகளில் மாற்று ஏற்பாடுகளை செய்ய வேண்டும் என்று அதிகாரிகளுக்கு உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா அறிவுறுத்தியுள்ளார்.

இதுகுறித்து புதுதில்லியில் நேற்று வேளாண் அமைச்சர் திரு. சிவ்ராஜ் சிங் சௌஹானுடன் இணைந்து அதிகாரிகளுடன் ஆலோசனை நடத்தினார்.

இந்தக் கூட்டத்தில் உள்துறை செயலர், வேளாண்துறை செயலர் உள்ளிட்ட பல்வேறு அமைச்சகங்களின் மூத்த அதிகாரிகள் கலந்துகொண்டனர்.

மழை குறைவாக பெய்துள்ள மற்றும் வறட்சி ஏற்பட உள்ள பகுதிகளை தொடர்ந்து கண்காணிக்க வேண்டும் என்றும் அவர் கூறியுள்ளார்.

எல்நினோ பாதிப்பால் விவசாயிகளுக்கு ஏற்படும் பிரச்சினைகளை போக்குவதற்கு வேளாண் மற்றும் அது தொடர்புடைய பிற அமைச்சகங்கள் விழிப்புடன் செயல்பட வேண்டும் என்று திரு. அமித் ஷா கேட்டுக்கொண்டார்.

மழைப்பொழிவு குறைவாக உள்ள பகுதிகளில் மாநில அரசுகளுடன் இணைந்து எந்தெந்த பயிர்களை விதைக்கலாம் என்பது குறித்து விவசாயிகளுக்கு தகுந்த ஆலோசனை வழங்க அவர் அறிவுறுத்தினார்.

குறைந்த நீர் தேவை கொண்ட தீவனம், சிறுதானியங்கள், பருப்பு வகைகளை சாகுபடி செய்ய விவசாயிகளை ஊக்குவிக்குமாறும் அவர் வலியுறுத்தினார்.

நாடு முழுவதும் உள்ள அனைத்து நீர்த் தேக்கங்களையும் தொடர்ந்து கண்காணிக்குமாறு நீர்வளத்துறை அதிகாரிகளை திரு. அமித் ஷா கேட்டுக்கொண்டார்.

<<<<<>>>>>

ஒரு டிரில்லியன் அமெரிக்க டாலர் ஏற்றுமதி இலக்கை அடைவதற்கான பாதையில் இந்தியா உறுதியாக முன்னேறி வருவதாக மத்திய வர்த்தகம் மற்றும் தொழில்துறை அமைச்சர் திரு. பியூஷ் கோயல் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் நேற்று நடைபெற்ற வர்த்தக வாரியக் கூட்டத்தில் உரையாற்றிய அவர், நடப்பு நிதியாண்டின் முதல் காலாண்டிலேயே ஆண்டு ஏற்றுமதியில் சுமார் 15 சதவீத இலக்கு எட்டப்பட்டுள்ளதாகக் குறிப்பிட்டார்.

உலகளாவிய சவால்கள் மற்றும் மந்தநிலைக்கு மத்தியிலும், கடந்த நிதியாண்டில், இந்தியா அதிகபட்ச ஏற்றுமதியைப் பதிவு செய்துள்ளதை அவர் சுட்டிக்காட்டினார்.

மாநில அரசுகள், ஏற்றுமதி மேம்பாட்டு அமைப்புகள் மற்றும் தொழில்துறை சங்கங்கள் ஏற்றுமதியை ஊக்குவிக்க ஏழு அம்சத் திட்டத்தை அமைச்சர் திரு பியுஷ்கோயல் அறிவித்தார்.

<<<<<>>>>>

பிரான்ஸ் நாட்டின் **Aix-en-Provence** நகரில், இந்தியா-பிரான்ஸ் இடையேயான பொருளாதார மற்றும் நிதித்துறை ஆலோசனைக் கூட்டம் நேற்று நடைபெற்றது.

மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் மற்றும் பிரான்ஸ் நாட்டின் நிதித்துறை அமைச்சர் திரு. ரோலண்ட் லெஸ்குரே ஆகியோர் தலைமையில் நடைபெற்ற இந்த கூட்டத்தில் உரையாற்றிய அமைச்சர்கள், இந்தியாவின் பொருளாதார வளர்ச்சிக்காக பிரெஞ்சு மேம்பாட்டு முகமை ஆற்றி வரும் பணிகளின் முக்கியத்துவத்தை அங்கீகரித்ததுடன், வருங்காலத் திட்டங்களுக்கான வாய்ப்புகளையும் வரவேற்றனர்.

இந்தியா மற்றும் பிரான்ஸ் நாடுகளுக்கு இடையே நிலவும் பொருளாதாரம், நிதி, தொழில்நுட்பம், முதலீடு மற்றும் வர்த்தகம் தொடர்பான சிக்கல்களைத் தீர்ப்பதற்கு இந்த கூட்டம் உதவும் என்று இரு தரப்பினரும் தெரிவித்தனர்.

<<<<<>>>>>

தில்லி முழுவதும் இதுவரை, சுமார் ஒரு லட்சத்து இரண்டாயிரம் வாக்காளர் படிவங்கள் டிஜிட்டல் மயமாக்கப்பட்டுள்ளதாக தில்லி தலைமைத் தேர்தல் அதிகாரி அலுவலகம் தெரிவித்துள்ளது.

தற்போது நடைபெற்று வரும் வாக்காளர் பட்டியல் சிறப்புத் தீவிர திருத்தம் பணிகளின்போது சுமார் 33 லட்சத்து 14 ஆயிரம் படிவங்கள் பொதுமக்களுக்கு விநியோகிக்கப்பட்டுள்ளன.

வீடு வீடாகச் சென்று படிவங்களை விநியோகிக்கும் பணி தீவிரமாக நடைபெற்று வருகிறது.

இந்த நடவடிக்கையின் ஒரு பகுதியாக, 13 ஆயிரத்திற்கும் மேற்பட்ட வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள் வரும் 29-ஆம் தேதி வரை ஒவ்வொரு வீட்டிற்கும் சென்று, ஏற்கனவே உள்ள வாக்காளர்களின் விவரங்களைச் சரிபார்க்க உள்ளனர்.

வாக்காளர் பட்டியல் தொடர்பான கோரிக்கைகள் மற்றும் ஆட்சேபனைகளை ஆகஸ்ட் 5-ஆம் தேதி முதல் செப்டம்பர் 4-ஆம் தேதி வரை சமர்ப்பிக்கலாம்.

இறுதி வாக்காளர் பட்டியல் வரும் அக்டோபர் 7-ஆம் தேதி வெளியிடப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<<>>>>>

மத்தியப்பிரதேச மாநிலம் சாகர் மாவட்டத்தில் உள்ள பண்டா அரசு மருத்துவமனையில், மருத்துவர்களின் கவனக்குறைவால் ஒன்றரை வயது குழந்தை பார்வையை இழந்த சம்பவம் கடுமையான மனித உரிமை மீறல் என்று தேசிய மனித உரிமைகள் ஆணையம் கூறியுள்ளது.

இதுகுறித்து இரண்டு வாரங்களுக்குள் விரிவான அறிக்கை சமர்ப்பிக்குமாறு மாநிலத் தலைமைச் செயலாளருக்கு நோட்டீஸ் அனுப்பியுள்ளது.

இந்தச் சம்பவம் குறித்துத் தகவலறிந்த தேசிய மனித உரிமைகள் ஆணையம், தாமாக முன்வந்து வழக்குப்பதிவு செய்துள்ளது.

சளி மற்றும் கண் சிவத்தல் பாதிப்புக்காக, அந்தக் குழந்தை பண்டா அரசு மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லப்பட்டதாகக் கூறப்படுகிறது.

அப்போது, மருத்துவர்கள் மூக்கில் செலுத்த வேண்டிய சொட்டு மருந்தை, தவறுதலாக குழந்தையின் கண்களில் செலுத்தியதன் காரணமாக, தொற்று ஏற்பட்டு குழந்தை தனது பார்வையை இழந்துள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

<<<<<>>>>>

அசாம் மற்றும் அருணாச்சலப்பிரதேச மாநிலங்களில் சமீபத்தில் பெய்த கனமழை, திடீர் வெள்ளம் மற்றும் நிலச்சரிவுகளால் ஏற்பட்டுள்ள பாதிப்புகளை நேரில் ஆய்வு செய்ய, மத்திய அமைச்சகங்களுக்கு இடையிலான குழுவை மத்திய அரசு அனுப்பி வைக்க உள்ளது.

அசாமின் பல மாவட்டங்களில் வெள்ளநீர் அபாயகரமாக அதிகரித்து வருவதையும், அருணாச்சலப்பிரதேசத்தின் மலைப்பாங்கான

பகுதிகளில் நிலச்சரிவு மற்றும் சாலை தடைகள் ஏற்பட்டுள்ளதையும் கருத்தில் கொண்டு இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இந்த மாநிலங்களில் உள்கட்டமைப்பு, விவசாயம் மற்றும் பொதுமக்களின் குடியிருப்புகளுக்கு ஏற்பட்டுள்ள சேதங்களை முழுமையாக மதிப்பீடு செய்ய இந்தக் குழுவின் நேரடி கள ஆய்வு மிகவும் அவசியமானது என்று உள்துறை அமைச்சகம் கூறியுள்ளது.

<<<<<>>>>>

ஜம்மு-கஷ்மீரில் அமர்நாத் யாத்திரையில் பங்கேற்கும் பக்தர்களின் எண்ணிக்கை தொடர்ந்து அதிகரித்து வருகிறது.

அமர்நாத் புனித யாத்திரை மேற்கொள்ளும் மூன்றாவது குழுவினர் பலத்த பாதுகாப்புடன் இன்று அதிகாலை ஜம்முவில் இருந்து புறப்பட்டுச் சென்றனர்.

இந்நிலையில், யாத்திரிகர்கள், சுற்றுலாப் பயணிகள் மற்றும் உள்ளூர் மக்களின் பொழுதுபோக்கிற்காக, ஜம்மு தாவி நதிக்கரையில் புதிய படகு சவாரி தொடங்கப்பட்டுள்ளது.

இதனை ஜம்மு மாநகராட்சி ஆணையர் டாக்டர் தேவன்ஷ் யாதவ் தொடங்கி வைத்தார்.

பொலிவுறு நகர திட்டத்தின் கீழ் தாவி நதிக்கரையை ஒரு சிறந்த நகர்ப்புற சுற்றுலாத் தலமாக மாற்றும் முயற்சியின் ஒரு பகுதியாக இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

<<<<<>>>>>

நாட்டின் பல மாநிலங்களில் இன்று கனமழை முதல் மிக கனமழை பெய்யக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

குஜராத், கோவா, மகாராஷ்டிரா, மேற்கு மத்தியப்பிரதேசம் மற்றும் ஒடிசா ஆகிய மாநிலங்களுக்கு இன்று ‘சிவப்பு எச்சரிக்கை’ விடுக்கப்பட்டுள்ளது.

இந்த மாநிலங்களில் ஆங்காங்கே கனமழை பெய்ய வாய்ப்புள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அடுத்த இரண்டு நாட்களுக்கு கிழக்கு ராஜஸ்தான், கிழக்கு மத்தியப்பிரதேசம், கடலோர கர்நாடகா, தெலங்கானா மற்றும் விதர்பா ஆகிய பகுதிகளில் கனமழை முதல் மிக கனமழை பெய்யக்கூடும் என்று கணிக்கப்பட்டுள்ளது.

மேலும், அசாம், மேகாலயா, நாகாலாந்து, மணிப்பூர், மிசோரம், திரிபுரா, மேற்குவங்கம், சத்தீஸ்கர், உத்தராகண்ட், இமாச்சலப்பிரதேசம், மராத்வாடா, மேற்கு ராஜஸ்தான் மற்றும் நாட்டின் தெற்குப் பகுதிகளிலும்

இன்று கனமழை பெய்ய வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

தலைநகர் தில்லியைப் பொறுத்தவரை, இன்று வானம் மேகமூட்டத்துடன் காணப்படும் என்றும், லேசான மழை பெய்ய வாய்ப்புள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<<>>>>>

உலகக் கோப்பை கால்பந்து போட்டியில் காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு அர்ஜென்டினா, சுவிட்சர்லாந்து, எகிப்து நாடுகள் முன்னேறியுள்ளன.

மியாமியில் இன்று காலை நடைபெற்ற நாக்-அவுட் சுற்று ஆட்டத்தில் அர்ஜென்டினா 3-2 என்ற கோல் கண்கிகல் கேப் வெர்தே அணியை வென்றது.

நேற்று டல்லாசில் நடைபெற்ற நாக்-அவுட் போட்டியில் எகிப்து 4-2 என்ற கோல் கணக்கில் ஆஸ்திரேலியாவை வென்றது.

வான்கூவரில் நடைபெற்ற மற்றொரு போட்டியில் சுவிட்சர்லாந்து 2-0 என்ற கோல் கணக்கில் அர்ஜீரியாவை வீழ்த்தியது.

தற்போது கொலம்பியா - கானா இடையிலான ஆட்டம் நடைபெற்று வருகிறது. இரவு மணி 10.30க்கு கனடா - மொராக்கோ இடையிலான ஆட்டம் நடைபெற உள்ளது.

**<<<<<END>>>>>**